# சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–6வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோமதி | மாவட்டம் | : | |
| க/பெ.பெயர் | : | சரவணவெங்கட்ராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திண்டுக்கல் 10 வள்ளலார் முதல் தெருவில் வசித்து வருகிறேன். சம்பவத்தின் போது தாடிகொம்பு ரோடு பழனி ரோடு திண்டுக்கல் என்ற விலாசத்தில் முன்பு வசித்து வந்தேன். நான் பல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். அருண்ராம் என்னுடைய உடன் பிறந்த சகோதரர் ஆவார். எனது கணவரின் அக்கா வீட்டுகாரர் 1ம் எதிரி ஆவார். 2ம் எதிரி என் கணவரின் அக்கா ஆவார். 3ம் எதிரி 1,2 எதிரிகளின் மகள் ஆவார்.

2. அருண்ராம் என்னுடைய உடன் பிறந்த சகோதரர். அவர் சென்னையில் பல் மருத்துவராக பணிபுரிந்து வந்தார். அருண்ராமும் என்னுடைய நாத்தனார் மகளான 3ம் எதிரி மஞ்சுவும் சுமார் 8 வருடங்களுக்கு மேலாக உயிருக்கு உயிராக காதலித்து வந்தார்கள். 3ம் எதிரி உறவினர் என்பதால் அவரை பெண் கேட்கலாம் என்று என் தயார், என் தந்தை என்னிடம் கூறினார். மேலும் என் தாய், தந்தையார் திண்டுக்கல்லில் உள்ள என் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

3. என் தந்தை என் வீட்டிலிருந்து அழைபேசிமூலம் என் நாத்தனாருக்கு தொடர்பு கொண்டு பெண் பார்த்து பேச வருகிறோம் என்று கூறினார்.

அதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். மேலும் என் வீட்டிலிருந்து காலிகட்டிற்கு கார் மூலம் என் தாய், தந்தையார் நாத்தனார் வீட்டிற்கு சென்றார்கள். மேற்கண்ட காலிகட்டில் உள்ள நாத்தனார் வீட்டிற்கு சென்று பார்த்த போது வீடு பூட்டி இருந்தது. உடனே என் தந்தை அவர்களின் வீட்டின் முன்பே இருந்து அழைபேசி மூலம் 1ம் எதிரியான சிவராமகிருஷ்ணனை தொடர்பு கொண்டார் ஆனால் சிவராமகிருஷ்ணன் அழைபேசியை எடுக்கவில்லை. அதனால் என் தாய், தந்தையர் அவர்களின் வீட்டு முன்பே அரை மணி நேரம் காத்திருந்தனர். ஆனால் எவ்வித தொடர்பும் 1,2 எதிரிகளிடம் இருந்து வரவில்லை என்பதால் அங்கு இருந்து என் தாய், தந்தையர் நடு இரவில் திண்டுக்கலில் உள்ள என் வீட்டிற்கு திரும்பினர்.

4. பின்பு மேற்கண்ட சங்கதிகளை என் தாய், தந்தையர் என் சகோதரர்அருண்ராமுக்கு தகவல் சொன்னார். அந்த தகவலை கேட்டு என் சகோதரர் மனம் உடைந்தார். அதன் பிறகும் 3ம் எதிரி என் தம்பியிடம் தொடர்ந்து பேசி கொண்டு இருந்தார். திடீர் என்று ஒருநாள் 3ம் எதிரி தனக்கு வேறு ஒரு மாப்பிள்ளை பார்த்து விட்டார்கள் என்பதால் என் தம்பியை திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று கூறினார் அதனால் என் தம்பி மனம் உடைந்து காணப்பட்டார்.8 வருடங்களாக என் தம்பியை காதலித்து 3ம் எதிரி ஏமாற்றிவிட்டார் என்று என் தம்பி புலம்பிகொண்டு இருந்தார்.

5. 18.06.2014 3ம் எதிரிக்கு திருமணம் உறுதி செய்யப்பட்டது. அதன் பின்பு என் தாய், தந்தையர் 15.06.2014 அன்று என் தம்பியை சென்னையில் இருந்து ஈரோட்டிற்கு வர சொன்னார்கள். அதன் பிறகு 17.06.2014 அன்று என் தம்பி தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்பு திண்டுக்கல்லில் இருந்து கிளம்பி ஈரோடு வந்தேன். 28.06.2014 அன்று ஈரோட்டில் இருந்தேன், அன்றையே தினம் என் தாய், தந்தையர் அருண்ராம் அறையை சுத்தம் செய்தவதற்காக சென்றார்கள். அங்கு சுத்தம் செய்யும் போது ஒரு புத்தகத்தில் அருண்ராம் எழுதி வைத்திருந்த தற்கொலை கடிதம் இருந்தது என்று என் தாய், தந்தையர் அந்த கடிதத்தை எடுத்து வந்து என்னிடம் காட்டினார்கள்.

6. மேற்படி அந்த கடிதத்தை படித்து பார்த்தேன். என் தம்பி தற்கொலைக்கு காரணமான எதிரிகள் தான் என்று எழுதிவைத்திருந்தார். பின்னிட்டு அந்த

தற்கொலை கடிதத்தை ஈரோடு வடக்கு காவல் ஆய்வாளரிடம் என் தந்தையர் கொடுத்தார். 30.06.2014 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது